**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்**

**முன்னிலை திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,**

நீதித்துறை நடுவர், இரணியல்

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 1032/2022**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | | |
|---|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | N.A | | |
| 2 | The date of filing of complaint/ final report in the Court | 28.04.2005 | | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | N.A | | |
| 4 | The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 05.08.2013 | | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | U/s. 348 BNSS Petition allowed on 01.04.2026<br>U/s.359 BNSS Petition allowed in respect of compoundable offence alone on 01.04.2026<br>U/s. 70(2) Cr.P.C Petition allowed on 25.02.2020 | | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Witness | Chief Examination | Cross Examination |
| | | P.W.1 | 01.04.2026 | -- |
| | | P.W.2 | 01.04.2026 | -- |
| | | P.W.3 | 01.04.2026 | 01.04.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) of the Court | 06.04.2026 | | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | A2 absconded on 09.09.2018 and surrendered on 25.02.2020 | | |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | N.A | | |



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:20 +0530

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>**குளச்சல்** காவல் நிலையம்,<br>குற்ற எண். 324/2004 | ......................குற்றமுறையீட்டாளர், |
| **/எதிர்/** | |
| ஜெயன் (வயது 27/2004)<br>த/பெ. லாரன்ஸ்<br>சாமிதட்டுவிளை, பாலப்பள்ளம் | ............... 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| ஆசீர்நேசராஜன் (வயது 24/2004)<br>த/பெ. துரைமணி<br>கடம்பறவிளை, ரீத்தாபுரம் | ............... 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| றோலீஸ் (வயது 19/2004)<br>த/பெ. வர்க்கீஸ்<br>குன்னன்விளை, பாலப்பள்ளம் | ............... 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| டென்சிலி (வயது 29/2004)<br>த/பெ. டென்னீஸ்<br>சலேட் நகர், வாணியக்குடி | ...............4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்<br>(வழக்கு விசாரணைக்கு முன்பு இறந்துவிட்டார்) |
| ஜஸ்டின் (வயது 26/2004)<br>த/பெ. அம்பி @ மரியதாஸ்<br>கோவில்விளை, பாலப்பள்ளம் | ............... 5ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்<br>(இவர் மீதான வழக்கு ஆ.ப.வ.எண் 85/2005ஆக தனியாக பிரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது) |
| வினோ (வயது 21/2004)<br>த/பெ. தங்கப்பன்<br>குன்னன்விளை, பாலப்பள்ளம் | ............... 6ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்<br>(இவர் மீதான வழக்கு ஆ.ப.வ.எண் 85/2005ஆக தனியாக பிரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது) |
| ஜோஸ் (வயது 24/2004)<br>த/பெ. ஜாண்சன்<br>குன்னன்விளை, பாலப்பள்ளம் | ............... 7ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்<br>(இவர் மீதான வழக்கு ஆ.ப.வ.எண் 85/2005ஆக தனியாக பிரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது) |

இவ்வழக்கு **23.05.2005** அன்று நீதிமன்றத்தில் ஆ.ப.வ.எண் 85/2005 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.11.2022 ஆம் தேதி தாய்வழக்கிலிருந்து பிரிக்கப்பட்டு ஆ.ப.வ.எண் 1032/2022 ஆககோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **06.04.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:26 +0530

உதவி வழக்கறிஞர் நிலை 1அவர்களும், 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் இலவச சட்ட உதவி வழக்கறிஞர் **திரு. P.செல்லையா** அவர்களும், 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திருமதி.Y.நளனிசெல்லம்** அவர்களும், 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. J.ஜின் ஜெப்ரின் ஜோஸ்** அவர்களும், ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **07.04.2026** ஆம் தேதி நீதிமன்றம் **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன்** கீழ் பிறப்பிக்கும்.....

<u>**தீர்ப்புரை**</u>

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும், பாரதிய சாக்சிய அதிநயம் 2023 என்பது பா.சா.அ 2023 என்றும், பாரதிய நாகரிக் சுரக்ச சங்கீதா 2023 என்பது, பா.நா.சு.ச.2023 என்றும் பதிவிடப்படுகின்றது.

<u>**1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**</u>

கடந்த26.07.2004 ஆம் தேதி அதிகாலை சுமார் 02.00 மணிக்கு புகார்தாரர் மாஷ்ல் பிரைட் ஆலன் தனது குடும்பத்துடன் வீட்டில் தூங்கி கொண்டிருக்கும் போது, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் தோப்பில் இளநீர் வெட்டியதை புகார்தாரர் தட்டிகேட்ட முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கைகளில் கம்பு, தடி, மரக்கட்டை, வெட்டுக்கத்தி போன்ற ஆயுதங்களுடன் ஒன்று கூடி வந்து, புகார்தாரரின் வீட்டின் பின் பக்க கதவை உடைத்து அத்துமீறி வீட்டினுள் நுழைந்து வீட்டினுள் இருந்த கைகடிகாரம், டார்ச் லைட் போன்ற பொருட்களை வெளியே கொண்டு வைத்து விட்டு வீட்டின் மற்றொரு அறையிலிருந்த ரூபாய் 1,700/- ரொக்க பணத்தை திருடியதாகவும், சத்தம் கேட்டு புகார்தாரர் படுக்கை அறையை திறந்து பார்த்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் வீட்டினுள் முன் தளத்திலும், பக்கத்து அறைகளிலும் நின்று கொண்டு, 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை மரகட்டையால் தலையில் ஓங்கி அடிக்க வந்த போது, புகார்தாரர் தனது இடது கையால் தடுத்ததால் அந்த அடி புகார்தாரரின் இடது கை மணிக்கட்டில் பட்டு சிறுகாயத்தையும், 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கையிலிருந்த மரக்கட்டையால் புகார்தாரரின் வலது கை மணிக்கட்டில் அடித்து சிறுகாயத்தையும் ஏற்படுத்தியதாகவும்,



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:32 +0530

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரை பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசியதாகவும், கொலைமிரட்டல் விடுத்து புகார்தாரருக்கு மரணபயம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேற்படி சம்பவம் சம்மந்தமாக ஒரு தகவல் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன் கீழ்** பெறப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு **1முதல் 7 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின்** செய்கையானது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 148, 323, 506(ii), 506(i), 380, 294(b), 452 r/w 149ன்** கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று **குவிமுச 1973 பிரிவு 173(2)**–ன்படி குற்றமுறையீட்டாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான டென்சிலின் வழக்கு விசாரணைக்கு முன்பு இறந்துவிட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது)**

**(5ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஜெஸ்டின், 6ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான வினோ, 7ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஜோஸ் ஆகியோர்கள் மீதான வழக்கு ஆ.ப.வ.எண் 85/2005 ஆக தனியாக பிரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது)**

**2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் **கு.வி.மு.ச 1973 பிரிவு 207** ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.கு.வி.மு.ச 1973 பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல்**

(1) வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **கு.வி.மு.ச 1973 பிரிவு 240(1)ன் கீழ் 1,2** குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இ.த.ச.1860 பிரிவுகள் 147, 452, 380, 323, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டி**ன் கீழும், 3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச.1860 பிரிவுகள் 148, 452, 380, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டி**ன் கீழும்,** குற்றச்சாட்டு வனையப்பட்டது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:41 +0530

(2) வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **கு.வி.மு.ச 1973 பிரிவு 240(2)ன் படி** தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை எனக்கூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள்.

**4. பா.நா.சு.ச 2023 பிரிவு 265ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:–**

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்களும், **அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2** வரையிலான சான்று பொருள்களும் குறியீடு செய்யப்பட்டன.

**5. பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவுதல்**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் **பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தங்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பதில் அளித்தார்கள்.

**6. பா.நா.சு.ச 2023 பிரிவு 266–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சாண்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு அதனடிப்படையில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

**இருதரப்பு வாதங்களை கேட்டபின்பு இந்நீதிமன்றம் ......**

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் 1,2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான **இ.த.ச.1860 பிரிவுகள் 147, 452, 380, 323, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளும், 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான **இ.த.ச.1860 பிரிவுகள் 148, 452, 380, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:47 +0530

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை? பிரச்சனைக்கான தீர்வுகள்

**(i) சாட்சியங்களில்.......**

(1) **புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலன்** தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், சம்பவம் சம்மந்தமாக புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

கண்ணுற்ற சாட்சியான **அ.சா.2 அருள்** சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**(ii) புலனாய்வு : –**

**அ.சா.3 திரு.ராஜ்மோகன்** கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் நீதிமன்ற புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது முறையாக ஒரு புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் **மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தும்** இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதை வைத்து இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில் தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**7. இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு**

ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள், கேள்விப்பட்ட சாட்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:54 +0530

**8. இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவான**

**இ.த.ச 1860 பிரிவு 147ஐ பொறுத்து :–**

**முதலாவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து சட்ட விரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்று கூடி சென்றார்களா?

**இ.த.ச 1860 பிரிவு 148ஐ பொறுத்து :–**

**இரண்டவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் கைகளில் ஆயுதங்களுடன் ஒன்று சேர்ந்து சட்ட விரோதமாக ஒன்று கூடி சென்றார்களா?

**இ.த.ச 1860 பிரிவு 294(b) ஐ பொறுத்து :–**

**மூன்றாவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் யாரேனும் ஒரு நபரை ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகிலோ ஏதாவது ஒரு ஆபாசச்செயலையோ அல்லது ஆபாசமான பாடலையே அல்லது வார்த்தைகளோ பாடி அல்லது உச்சரித்தது அல்லது கூறி அதனால் யாரேனும் ஒரு நபருக்கு தொல்லை ஏற்பட்டதா?

**இ.த.ச 1860 பிரிவு 452 ஐ பொறுத்து :–**

**நான்காவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்களா?

**இ.த.ச 1860 பிரிவு 380 ஐ பொறுத்து :–**

**ஐந்தாவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் உடைமைகளை திருடினார்களா?

**இ.த.ச 1860 பிரிவு 323ஐ பொறுத்து :–**

**ஆறாவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார்களா?

**இதச 1860 பிரிவு 506 பத்தி இரண்டை பொறுத்து**

**ஏழாவதாக –** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை குற்றுமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் அவர்களுக்கு உடனடியான உயிர் பயம் ஏற்பட்டதா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:57:17 +0530

9. <u>மேற்சொன்ன 7வினாக்களுக்கான ஆய்வும் அதற்கான காரணமும்</u>

(i) அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், காயச்சான்றிதழ்** ஆகியவற்றை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **பா.சா.அ 2023 பிரிவு 104 மற்றும் பிரிவு 2ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

(ii) அரசுத்தரப்பில் இந்த வழக்கினை அதன் சங்கதிகளை பொறுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரும், நட்சத்திர சாட்சிகளுமான **அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலனை** முன்னிறுத்தி தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் இவ்வழக்கின் சாட்சியங்களை பின்வருமாறு இந்நீதிமன்றம் ஆய்வு செய்கிறது.

(iii) அரசுத்தரப்பில், இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும், பாதிக்கப்பட்ட நபருமான **அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலன்** இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பொறுத்து தனது சாட்சியத்தில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு தன் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது தன்னை யாரோ அடித்துவிட்டார்கள் என்றும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது புகார்மனு கொடுத்துவிட்டேன் என்றும், கண்ணுற்ற சாட்சியான **அ.சா.2 அருள்** தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்திருப்பதை பொறுத்து அரசுத்தரப்பில் அதன் சங்கதிகளை பொறுத்து இந்த இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் **கலகம் செய்யும் நோக்கத்துடன் கைகளில் ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக ஒன்று கூடி சென்றார்களா, ஆபாசமாக பேசி அதனால் யாரேனும் ஒருவருக்கு தொல்லை ஏற்பட்டது என்றோ, புகார்தாரரின் உடைமைகளை திருடி சென்றார்கள் என்றோ, 1,2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1ஐ தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார்கள் என்றோ, குற்றமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் உடனடியாக உயிர்பயம் ஏற்பட்டது என்றோ** எந்த சாட்சியமும் முன்னிறுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது .



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:57:23 +0530

(iv) காயம் குறித்த சங்கதியை பொறுத்து மேற்படி **அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலன்** காயம் அடைந்துள்ளாரா அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலன்** காயம் அடைந்துள்ளார் என்பதும், அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதும் அரசுத் தரப்பில் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(v) ஆனால் மேற்படி காயத்தை இந்த வழக்கின் 1,2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் ஏற்படுத்தினார்கள் என்பதற்கான எந்தவித சாட்சியங்களையும் முன்னிறுத்தவில்லை என்பதையும் அதனால் காயத்தை யார் ஏற்படுத்தினார்கள் என்ற சங்கதியானது நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(iv) அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களில் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்ட புகார்மனு அதனை தொடர்ந்து குறியீடு செய்யப்பட்ட **அ.சா.ஆ.2** ஆன முதல் தகவல் அறிக்கையும் வழக்கில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களை பொறுத்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் **நிரூபிக்கப்படவில்லை** என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(v) அரசுத்தரப்பில் **அ.சா.3** மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரி சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக்காட்டக்கூடிய மாதிரி வரைபடம், பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, படிவம் 91 **அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6, அ.சா.பொ.7** ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். மேற்படி கேள்விநிலை சாட்சியம் என்பது **பா.சா.அ 2023 பிரிவு 55ன் கீழ்** ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதையும் கருத்தில் கொண்டு **அ.சா.3 ஆன காவல் அதிகாரியின்** சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது, என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:57:32 +0530

**பா.சா.அ 2023 பிரிவு 139**ன்படி ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.1 மார்ஷல் பிரேனட் ஆலன்** அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் மற்ற சாட்சியங்கள் எவ்வகையிலும் அரசுத்தரப்பை உறுதிப்படுத்தவில்லை என்பது இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :**

மேலும் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் மேற்படி சம்பவத்தை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் செய்தார்கள் என்பதற்கான தகுந்த சாட்சிய சான்றாவணங்களை அரசுத்தரப்பில் சமர்ப்பிக்காததால் அரசுத்தரப்பு தனது தரப்பை நீதிமன்றத்திற்கு சமர்பிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் தனது தரப்பை இந்த வழக்கில் **1,2வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின்** மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 452, 380, 323, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளும், **3வது குற்றம் சுமத்தப்பட்ட நபரின்** மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **148, 452, 380, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றச்சாட்டுகளும், **மெய்பிக்கவில்லை** என்றும் **பா.சா.அ. 2023 பிரிவு 2 மற்றும் பிரிவு 104ன்** படியும் தீர்வு காண்கிறது.

**8.வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீதான ஆய்வு**

இந்த வழக்கில் அரசுத்தரப்பில் குற்றப்பத்திரிக்கையில் **1,2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்** மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 452, 380, 323, 294(b), 506 பத்தி இரண்டின்** கீழான குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்தும், **3வது குற்றம் சுமத்தப்பட்ட நபரின்** மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **148, 452, 380, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்தும், எவ்வித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:57:37 +0530

9. <u>முடிவாக,</u>

**1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஜெயன் த/பெ. லாரன்ஸ், 2ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஆசீர்நேசராஜன் த/பெ. துரைமணி** ஆகியோர்கள் மீதான **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 147, 452, 380, 323, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றசாட்டுகளும், **3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **றோலீஸ் த/பெ. வர்க்கீஸ்** மீதான **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 148, 452, 380, 294(b) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றசாட்டுகளும் அரசுத்தரப்பில் **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை **குற்றவாளி இல்லை** என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஜெயன் த/பெ. லாரன்ஸ், 2ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஆசீர்நேசராஜன் த/பெ. துரைமணி, 3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **றோலீஸ் த/பெ. வர்க்கீஸ்** ஆகியோர்களை வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், **பாரதிய நாகரிக் சுரக் ஷா சங்கீதா 2023 பிரிவு 271(1)ன்** படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>10. பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு</u>

வழக்கில் ஆர்.பி.எண் 47/2005ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 ஆன விரிசல் ஏற்பட்ட ஏர்தாள் பொருத்தும் கொண்டி ஒன்று, அ.சா.பொ.2 ஆன சுமார் 2 அடி 1 இஞ்ச் நீளம் கொண்ட மரக்கடை ஒன்று ஆகியவை உபயோகமற்றது என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் விதிகளில் உள்ளதுபடி அழிக்க பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

<u>11. பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396ன் கீழ் உத்தரவு</u>

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396** ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

<u>12. பா.நா.சு.ச 2023 பிரிவு 481– ன் கீழ் உத்தரவு</u>

வழக்கில் **பா.நா.சு.ச 2023 பிரிவு 481–**ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:57:43 +0530

6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (07.04.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறியப்பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN Date: 2026.04.07 18:57:49 +0530

நீதித்துறை நடுவர்

இரணியல்

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | மார்ஷல் பிரேனட் ஆலன் | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.2 | அருள் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | ராஜ்மோகன் | கூடுதல் சாட்சி |

**<u>அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.07.2004 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 26.07.2004 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 26.07.2004 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | 26.07.2004 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 28.07.2004 | ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.6 | 26.07.2004 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 26.07.2004 | படிவம் 91 |
| அ.சா.ஆ.8 | -- | காயச்சான்றிதழ் |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** *: இல்லை*

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணம்** : இல்லை

SYEDMOHAMED AMEER DHEEN Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN Date: 2026.04.07 18:57:58 +0530

நீதித்துறை நடுவர்

இரணியல்

Judicial Magistrate Court,
Eraniel
Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".